**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.57** **நாள்: 27.04.2018**

**உலக கால்நடை மருத்துவ தினத்தை முன்னிட்டு, நாய் பிடிக்கும் மற்றும் இனக்கட்டுப்பாடு மைய பணியாளர்களுக்கு வெறிநோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, பொதுசுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் சார்பில், உலக கால்நடை மருத்துவ தினத்தை முன்னிட்டு நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் நாய் இனக்கட்டுப்பாடு மைய பணியாளர்களுக்கு வெறிநோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாமை பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.04.2018) ரிப்பன் மாளிகையில் உள்ள மாநகராட்சி மருந்தகத்தில் துவக்கி வைத்தார்.

இந்த சிறப்பு முகாமில் மொத்தம் 61 நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கு முன் தடுப்பு (Prophylactic) வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டது. இவர்களுக்கு இரண்டாம் தவணை மற்றும் மூன்றாம் தவணை தடுப்பூசிகள் முறையே 04.05.2018 மற்றும் 18.05.2018 ஆகிய நாட்களில் போடப்பட உள்ளது.

கடந்த ஆண்டு 13,344 தெரு நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு (Animal birth control) மற்றும் வெறிநோய் தடுப்பூசி (Anti rabies vaccination) போடப்பட்டுள்ளது. மேலும், வீடுகளில் வளர்க்கும் 968 நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி (Anti rabies vaccination) போடப்பட்டுள்ளது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சில நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் வெறிநோய் தடுப்பூசி பொதுமக்களுக்கு தினமும் போடப்பட்டு வருகிறது. இதன்மூலம் வெறிநோய் பாதிப்புகளிலிருந்து பொதுமக்களுக்கு உரிய தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**